

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 13-11-2024


# நல்லாட்சியல்ல, பொய்யாட்சி 1

மக்கள் அனைத்தையும் மறந்திருப்பார்கள் என்று நினைத்து பொய்ப் பேட்டிகளை வண்டி வண்டியாக அவிழ்க்கத் தொடங்கி இருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் பழனிசாமி. நாசகார ஆட்சியைத்தான் இவர் கொடுத்தாரே தவிர, நல்லாட்சியைத் தரவில்லை.

“2011 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 10 ஆண்டு காலம் சிறந்த ஆட்சியை அ.தி.மு.க. தந்துள்ளது. ஜெயலலிதா ஆட்சியில் இருந்த போது நிறையத் திட்டங்களைக் கொண்டு வந்து, அதனால் மக்கள் பயன்பெற்றுள்ளனர். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு நான் பொறுப்பேற்று நான்கு ஆண்டுகள் சிறப்பான ஆட்சி செய்தேன்” என்று சிரிக்காமல் பேட்டி அளித்துள்ளார் பழனிசாமி.

தனது சொந்தத் தொகுதியில் கூட எந்த அடிப்படை பிரச்சினையையும் பழனிசாமி தீர்க்கவில்லை. பிறகு எப்படி தமிழ்நாட்டில் மற்ற தொகுதிகளில், அம்மக்களின் பிரச்சினையை பழனிசாமி தீர்த்திருப்பார்?

சுமார் 10 ஆயிரம் பேர் வேலைக்காக பதிவு செய்துள்ளார்கள் எடப்பாடி தொகுதியில் மட்டும். அவர்களது அனைத்து விண்ணப்பங்களையும் கட்டுக் கட்டாக அடுக்கி எடுத்து வந்து பொதுவெளியில் காட்டினார் தி.மு.க. தலைவர்.

**2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக அனைத்துத் தொகுதியிலும் கிராமசபைக் கூட்டங்களை நடத்தினார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அப்போது, எடப்பாடி தொகுதியில் நடந்த கிராம சபையில் பேசிய பெண்கள் அனைவரது உரையும் கண்ணீரையும் கோபத்தையும் வரவைத்தது. அரசாங்க அலுவலகத்துக்கு போனால் எந்த இடத்தில் எவ்வளவு லஞ்சம் தர வேண்டி இருக்கிறது என்றார் ஒரு பெண். நெசவாளர் நிறைந்த அந்தப் பகுதியில் நெசவாளர் துயர் துடைக்க எதுவும் செய்யவில்லை என்றார் இன்னொருவர். டாஸ்மாக் கடைகள் மூலமாக ஏற்படும் சட்டம் - ஒழுங்கை இன்னொருவர் சொன்னார். படித்த தன்னைப் போன்றவர்க்கு வேலை கிடைக்காத கொடுமையை இன்னொருவர் சொன்னார். ‘ரோடு போடுவதைத் தவிர எதுவும் செய்யவில்லை, அதுவும் போட்ட ரோட்டையே திரும்பத் திரும்பப் போடுகிறார்கள்’ என்று சொன்னார் மற்றொருவர்.**

முதலமைச்சர் பதவியில் இருந்த பழனிசாமி தனது சொந்தத் தொகுதியைக் கூட எவ்வளவு கேவலமாக வைத்துள்ளார் என்பதைப் படம் பிடித்தது எடப்பாடியில் நடந்த கிராமசபை!

**1. எடப்பாடி தொகுதியில் ஜவுளிபூங்கா**

**2. நெருஞ்சிப்பேட்டையில் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம்**

**3. கொங்கணாபுரத்தில் தொழில்பேட்டை**

**4. மேட்டூர் அணையில் இருந்து வெளியேறும் உபரி நீர் பயன்பாடு**

**5. எடப்பாடி அரசு மருத்துவமனை மேம்பாடு**

**6. கொங்கணாபுரம் கூட்டுறவு வங்கி விவகாரம்**

**7. மின் மயானங்கள்**

**8. தேங்காய், மா.பருத்தி, மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றுக்கு ஆதார விலை**

**9. பொதுக்கழிவு சுத்திகரிப்பு நிலையம்**

**10. நிலக்கடலை விவசாயிகளுக்கு தனிகூட்டுறவு சங்கம்**

- இவை அனைத்தும் பழனிச்சாமி, எடப்பாடித் தொகுதிக்குச் செய்து தருவதாகச் சொன்ன வாக்குறுதிகள். இதனை நிறைவேற்றித் தரவில்லை என்றுதான் அந்தத் தொகுதி மக்கள் குற்றம் சாட்டினார்கள்.

நங்கவல்லி டவுன் பஞ்சாயத்தில் உள்ள வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தின் தலைவர் பொதுப்பணத்தை மோசடி செய்தார். இது கண்டுபிடிக்கப்பட்டது. அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் என்பதால் விசாரணை நாடகம் நடத்தி, இழப்பை மட்டும் பதிவு செய்து அவரை காப்பாற்றிவிட்டார் பழனிசாமி. அ.தி.மு.க. உள்ளூர் தலைவர்களும் பழனிசாமிக்கு நெருக்கமான உதவியாளர்களும் சட்டவிரோதமாக மணல் கொள்ளையில் ஈடுபட்டு வருகிறார்கள் என்று குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. பொங்கல் பரிசுகளாக விநியோகிக்கப்பட்ட கரும்பில் பழனிசாமியின் நெருங்கிய கூட்டாளிகள் கமிஷன் பார்த்துள்ளார்கள். தேங்காய் வியாபாரிகள் பெருமளவு பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இதுவும் அப்போது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுதான்.

“எடப்பாடியில் உள்ள கொங்கணாபுரத்தில் உள்ள விவசாய நிலங்கள் வழியாக எண்ணெய் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. கேரளாவில், கர்நாடக குழாய் இணைப்பு இங்கு போலல்லாமல் நெடுஞ்சாலைகள் வழியாகச் செல்கிறது. ஆனால் இங்கு ஆயிரக்கணக்கான விவசாயிகளின் விவசாய நிலங்களையும் சேதப்படுத்துகிறது” என்றும் அப்போது பொதுமக்கள் சொன்னார்கள்.

அ.தி.மு.க. அரசாங்கம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு பெரியநாச்சியூர் கிராமத்தில் இருந்த ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தை இடித்தது. 2021 வரை அதைக் கட்டித் தரவில்லை. மக்கள் எதற்கெடுத்தாலும் எடப்பாடி நகரத்துக்குத்தான் செல்ல வேண்டி உள்ளது. தூய்மையான பஞ்சாயத்து விருதை கொடுத்துள்ளார்கள். ஆனால் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை ஒன்றரை ஆண்டுகளாக சுத்தம் செய்யவில்லை என்று மக்கள் சொன்னார்கள். இதுதான் அவர் நல்லாட்சி நடத்திய லட்சணம் ஆகும்.

கிராமசபைக் கூட்டம் நடந்த பஞ்சாயத்தில் 52 சின்டெக்ஸ் தண்ணீர் தொட்டிகள் உள்ளன. 3 ஆண்டுகளுக்கு முன்பு இதில் 40 தொட்டிகளில் இருந்து மோட்டார் அகற்றப்பட்டது, அவை 2021 முதல் பொருத்தப்படவில்லை. கிராமசபைக் கூட்டம் மைதானத்தின் நுழைவாயிலில் ஒரு சின்டெக்ஸ் தொட்டி உள்ளது, அதில் கடந்த 3 ஆண்டுகளாக தண்ணீர் இல்லை. இதுதான் பழனிசாமியின் தொகுதியின் அன்றைய நிலைமை!

**“ஆனால் கழிவறை கட்டுவதில் கமிஷன் அடித்துவிட்டார்கள். ஒன்றிய அரசு அறிமுகப்படுத்திய வீட்டு கழிப்பறை திட்டத்தில் சேர 2 ஆயிரம் ரூபாய் கமிஷனாக அ.தி.மு.க. பிரமுகர்கள் வாங்கி இருக்கிறார்கள். தனிப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புக்கு 4000 ரூபாய், 5000 ரூபாய் வசூலித்திருக்கிறார்கள். காசு கொடுத்தால்தான் டெண்டர் என்று பழனிசாமி நடந்து கொள்வதைப் போலவே அவரது கட்சிக்காரர்களும் காசு கொடுத்தால்தான் இது போன்ற அரசின் பயனை பெற முடியும் என்ற நிலைமைதான் எடப்பாடி தொகுதியில் இருக்கிறது” என்று அப்போது மக்கள் சொன்னார்கள். இதுதான் அவர் நல்லாட்சி நடத்தியதா?**

**எப்போதும் சேலத்தில் போய் பதுங்கிக் கொள்ளும் பழனிசாமி, சேலம் மாவட்டத்துக்காவது ஏதாவது செய்துள்ளாரா என்றால் அதுவும் இல்லை!**

**- தொடரும்!**

## மணிமுத்தாறு அருவியில் குளிக்க சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி!

நெல்லை, நவ. 13 –

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு மற்றும் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் பரவலாக கன மழை பெய்து வருகிறது. அருவியில் வெள்ளம் ஏற்படும் சமயங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கு அருவியில் குளிக்க தடை விதிக்கப்படுவது வழக்கம்.

அந்த வகையில் கடந்த சில தினங்களாக நெல்லை மாவட்டத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக மணிமுத்தாறு அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் நீர்வரத்து சீரானதால் மீண்டும் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி வழங்கி வனத்துறை உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து மணிமுத்தாறு அருவியில் சுற்றுலா பயணிகள் ஆனந்த குளியல் போட்டு வருகின்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.11.2024) முகாம் அலுவலகத்தில், உலகத் தமிழர் பேரமைப்பின் நிறுவனரும், தோழர் இரா.நல்லகண்ணு நூற்றாண்டு விழாக்குழு தலைமை ஒருங்கிணைப்பாளருமான பழ.நெடுமாறன் சந்தித்து, 29.12.2024 அன்று நடைபெறவுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் இரா. நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு விழாவினை தொடங்கி வைத்து சிறப்பிக்க வேண்டுமென்று அழைப்பு விடுத்தார். உடன் விழா ஒருங்கிணைப்புக் குழு நிர்வாகி த.மணிவண்ணன் உள்ளார்.

### முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர்

# அய்யா நல்லகண்ணு நூற்றாண்டு விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார்!

**சென்னை, நவ. 13 -**

**முதுபெரும் கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர் அய்யா நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கிறார்.**

இது குறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்திற்கு வருகை தந்த பழ.நெடுமாறன் அவர்களை வரவேற்று கைத்தாங்கலாக உள்ளே அழைத்துச் சென்று அய்யா நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்க விடுத்த அழைப்பினை ஏற்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.11.2024) அவருடைய முகாம் அலுவலகத்திற்கு உலகத் தமிழ்ப் பேரமைப்பின் நிறுவனரும் முதுபெரும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தலைவர் தோழர் இரா.நல்லக்கண்ணு நூற்றாண்டு விழாக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளருமான பழ.நெடுமாறன் அவர்கள் வருகை வந்தார்கள்.

அப்பொழுது, முதலமைச்சர் அவர்கள் வெளியே வந்து பழ.நெடுமாறன் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று, கைத்தாங்கலாக உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

அப்பொழுது பழ.நெடுமாறன் அவர்கள் 29.12.2024 அன்று சென்னையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் இரா. நல்லக்கண்ணு அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெறுகிறது என்றும் அவ்விழாவில் முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென்றும் அழைப்பு விடுத்தார்கள்.

முதலமைச்சர் அவர்கள் பழ நெடுமாறன் அவர்களின் அன்பான அழைப்பை ஏற்று, நிகழ்ச்சியில் பங்கேற்பதாக உடனடியாக இசைவு தெரிவித்ததுடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மலரை வழங்கினார்.

அதன் பின்னர், முதலமைச்சர் அவர்களிடமிருந்து விடைபெற்று புறப்பட்ட பழ.நெடுமாறன் அவர்களை முதலமைச்சர் அவர்கள் மீண்டும் அவரைக் கைத்தாங்கலாக வெளியே அழைத்து வந்து அவருடைய காரில் வழியனுப்பி வைத்தார்கள்.

அப்பொழுது, விழா ஒருங்கிணைப்புக் குழு நிர்வாகிகள் த.மணிவண்ணன், வே.வெங்கடேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

### சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமை!

# பம்பைப்படையூர் மாமன்னர் இராசராச சோழன் வரலாற்று ஆய்வு மற்றும் பண்பாட்டு மையம் சார்பில் 1039-வது சதய விழா!

## உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், நடிகர் ராஜேஷ் பங்கேற்பு!

*தஞ்சாவூர், நவ.13 -*

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகே உள்ள இராசஇராச சோழன் பிறந்த பகுதியான பம்பைப் படையூரில் மாமன்னர் இராசராச சோழன் வரலாற்று ஆய்வு மற்றும் பண்பாட்டு மையம் சார்பில் 1039-வது சதய விழா தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

மாமன்னர் இராசராச சோழன் வரலாற்று ஆய்வு மற்றும் பண்பாட்டு மைய செயலாளர் சு.க.ஸ்ரீதரன் வரவேற்புரையாற்றினார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசின் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சோழர் வரலாற்று சிறப்பு விழா ஓவியக் கண்காட்சியினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

பின்னர் ஓவிய கண்காட்சியில் வெற்றிப்பெற்ற மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசின் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தலைவர் நடிகர் வி.ராஜேஷ் பரிசுகளை வழங்கி வாழ்த்துரையாற்றினார்.

சோழர் வரலாற்று விழா சிறப்பு மலரை அமைச்சர் கோவி.செழியன் வெளியிட தமிழ்நாடு அரசின் ஓய்வு பெற்ற அரசு முன்னாள் கூடுதல் செயலாளர் டி.எஸ். ஸ்ரீதர் பெற்றுக்கொண்டனர்.

தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலுவலர் தி.தியாகராஜன், கும்பகோணம் மாநகர துணை மேயர் சு.ப. தமிழ்ழகன், முது முனைவர் குடவாயில் எஸ்.பாலசுப்ரமணியன், தஞ்சை மண்டல கல்லூரி இணைக்குனர் முனைவர் ந.தனராஜன், முன்னாள் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் சி.இராஜமாணிக்கம், முனைவர் ஆ.துளசேந்திரன், ஓய்வு பெற்ற தொல்லியல் துறை அலுவலர் கி.ஸ்ரீதரன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உதவிச் செயலாளர் முனைவர் முத்து வாவாசி, சரஸ்வதி மஹால் நூலக தமிழ் பண்டிதர் மணி.மாறன், தமிழ் எழுச்சி பேரவை தெலைவர் கோ. கண்ணன், சோழமண்டல வரலாற்று தேடல்குழு தலைவர் மரு.த.உதயசங்கர், முனைவர் தமிழடியான், ஜோ.மகேஸ்வரன், சோழ தேச வரலாற்று ஆய்வு குழு தலைவர் அய்யம்பேட்டை என்.செல்வராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

வரலாற்று ஆய்வு மைய பொறுப்பாளர்கள் நல்லாசிரியர் வெ.இராஜீ, எஸ்.பாலசுப்ரமணியன், வி.ஏ.ரொசாரியோ, யூ.எஸ்.ஆர்.லோகநாதன், விழா ஒருங்கிணைப்பாளர் எஸ்.கே.முத்துசெல்வம் ஆகியோர் விழா ஏற்பாட்டை சிறப்பாக செய்திருந்தனர்.

எஸ்.பாரி, கே.செல்வமுத்துகுமரன், வழக்கறிஞர் பா.விஜயகுமார், ஏ.எஸ். மூர்த்தி, எஸ்.ராம்குமார், மரு.கே.கமலகண்ணன், கே.கே.எஸ்.ராஜா, எஸ். பொற்செழியன், பி.செந்தில் குமார், ஜி.கல்யாணம், ஜி. சக்கரவர்த்தி, எல்.ராஜேந்திரன், எஸ்.சாய்ராஜன், பி. மணிமாறன், டி.சிவக்குமார், பா.ராக்கேஷ், டி.சங்கர், ஜி.எஸ்.எம்.பிரபு, ஜீவா, எ.சாமிநாதன் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பொது மக்கள் பங்கேற்றனர்.

அரசு வழக்கறிஞர் ஆடுதுறை மு.உத்திராபதி ஒருங்கிணைத்து நடத்தினார். திருவையாறு அரசர் கல்லூரி முன்னாள் முதல்வர் சு.தங்கமுத்து நன்றியுரையாற்றினார்.

### தமிழ்நாட்டில்

# ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, நவ. 13 -*

தலைமைச் செயலாளர் என்.முருகானந்தம் நேற்று முன்தினம் (11.11.2024) வெளியிட்டுள்ள உத்தரவில், சுற்றுலாத்துறை ஆணையராகவும், மேலாண்மை இயக்குநருமான சமயமூர்த்தி மனித வள மேலாண்மைத்துறை செயலாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். தேசிய ஊரக திட்ட இயக்குநராக உள்ள ஷில்பா பிரபாகர் சுற்றுலாத் துறை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைமைத் தேர்தல் அதிகாரியாக இருந்த சத்யபிரத சாகு, கால்நடை, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர்கள் நலத்துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சமக்ர சிக்ஷா திட்ட இயக்குநர் ஆர்த்தி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அலுவலக துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை செயலாளராக அதுல் ஆனந்த் நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய சுகாதார திட்ட இயக்குநராக அருண் தம்புராஜ் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தில் ரூ.30 கோடி மதிப்பில் இணைப்பு சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.